1997 ஏப்ரல் 28]

720--

சுற்றுலாத் தலங்களுக்கு அடிப்படை வசதிகள்

3510*--திரு. பொ. முருகேசன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சுற்றுலாத் தலங்களாக அறிவிக்கப்பட்ட நகரங்களுக்கு என்னென்ன அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சுற்றுலாத் தலங்களாக அறிவிக்கப்பட்டுள்ள நகரங்களில் அந்தந்த நகரங்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட வசதிகள் செய்து தரப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். யாத்ரிகர் விடுதி அமைத்தல்; இளைஞர் விடுதி அமைத்தல்; சாலையோர வசதிகள் ஏற்படுத்துதல்; சுற்றுலா வளாகம் அமைத்தல்; தங்கும் விடுதியுடன் கூடிய உணவகம் அமைத்தல்; நீர்நிலைகள் இருக்குமிடங்களில் படகுக் குழாம் அமைத்து படகு விடுதல்; அணைக்கட்டு போன்ற இடங்களில் தொலைநோக்கி அமைத்தல்; தேவையான இடங்களுக்கு நீர்விளையாட்டு சாதனங்கள் மற்றும் சாகசச் சுற்றுலாச் சாதனங்கள் வாங்கித் தருதல், சுற்றுலாப் பேருந்துகள் விடுதல்.

திரு. பொ. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னவைகள் ஒரு சில இடங்களில், குறிப்பாக- இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற-- காஞ்சி மாநகருக்கு செயல்படுத்தப்படுகிறது. இந்தத் துறையின் மூலமாக, சோடியம் விளக்கு வசதிகள் செய்யப்படும் என்ற கருத்து இருக்கிற காரணத்தால், சென்னை-பெங்களூர் சாலையிலுள்ள, காஞ்சி மாநகர் நுழைவாயில் என்று கருதப்படுகின்ற பொன்னேரிக் கரைக்கு சோடியம் விளக்கு வசதிகள் அமைத்துத் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைப் பொறுத்து, சோடியம் விளக்கு வசதி செய்து கொடுப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். ஆண்டி அம்பலம்.

திரு. எம். ஆண்டிஅம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நத்தம் தொகுதி திருமலைக்கேணியை சுற்றுலா மையமாக அறிவித்து இருக்கிற அதேநேரத்தில், அங்கு மான்கள், மயில்கள் சரணாலயம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலங்குகள் சரணாலயம் அமைப்பது, சுற்றுலாத் துறையின் மூலமாக முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆண்டி அம்பலம், நீங்கள் சும்மா இருந்திருக்கலாம் அல்லவா? (சிரிப்பு). வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. கவன ஈர்ப்பு

(அ) கடலூர் நகர குடிநீர்ப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. 55-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. இ. புகழேந்தி.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் நகரக் குடிநீர்ப் பிரச்சினை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.